O.S.No.115/2015

Date : 08.09.2021

வா.சா.1. சரஸ்வதி

பிரதிவாதிகள் தரப்பு கு.வி.தொடர்ச்சி :

ஐயப்பனின் பள்ளிச்சான்றில் அவரது தகப்பனார் பெயர் பொன்னுச்சாமி ஆசாரி என்று குறிப்பிடவில்லை என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. ஐயப்பன் இன்று என்னுடன் நீதிமன்றம் வந்துள்ளார். எனக்கும், பொன்னுச்சாமி ஆசாரிக்கும் இடையே குழந்தை பாக்கியம் இல்லாததால் எங்களுக்குள் மனஸ்தாபம் ஏற்பட்டு அதனால் நாங்கள் இருவரும் 1991 ஆம் ஆண்டே பிரிந்து விட்டோம் என்றால் சரியல்ல. 1991 ஆம் ஆண்டே எனக்கும், பொன்னுச்சாமி ஆசாரிக்குமான திருமணம் சமுதாய வழக்குப்படி ரத்து ஆகிவிட்டது என்றால் சரியல்ல. தாவா வீட்டிற்கும் எதிரே தான் 1ம் பிரதிவாதி குடியிருந்து வந்தார் என்றால் சரிதான். 1ம் பிரதிவாதி தேவர் சமுதாயத்தைச் சேர்ந்தவர் என்றால் சரிதான். 1991 ஆம் ஆண்டிற்கு முன்னரே பொன்னுச்சாமி ஆசாரி, 1ம் பிரதிவாதியிடம் காதல் வசப்பட்டு, உறவு கொண்டிருந்தார் என்றால் சரியல்ல. பொன்னுச்சாமி ஆசாரி மூலவியாதியினால் பாதிக்கப்பட்டிருந்தார் என்று இவ்வழக்கின் பிராதிலோ, முந்தைய வழக்கிலோ குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். எனக்கும், பொன்னுச்சாமி ஆசாரிக்கும் இடையேயான திருமணம் ரத்தான பின்னர் பொன்னுச்சாமி ஆசாரி சமுதாய பெரியோர்கள் முன்னிலையில் 1ம் பிரதிவாதியை கலப்பு திருமணம் செய்து கொண்டார் என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதி தாவா சொத்தில் தற்பொழுது குடியிருக்கவில்லை. 1ம் பிரதிவாதி 8 ஆண்டுகளுக்கு முன்னர் தான் தாவா சொத்தில் குடியிருந்தார். தாவா சொத்திலிருந்து 1ம் பிரதிவாதியை காலி செய்து சுவாதீன ஒப்படைவு கோரி பரிகாரம் கோரியுள்ளேன் என்றால் சரிதான். 1ம் பிரதிவாதி தாவா சொத்தில் தற்போது இல்லை என்பதால் சுவாதீன ஒப்படைவு பரிகாரத்தினை திருத்தம் எதுவும் செய்யவில்லை என்றால் சரிதான். 1ம் பிரதிவாதி தற்போதும் தாவா சொத்தில் குடியிருப்பதை நாங்கள் ஒப்புக் கொண்டு தான் சுவாதீன ஒப்படைவு பரிகாரத்தினை திருத்தம் செய்யவில்லை என்றால் சரியல்ல. பொன்னுச்சாமி ஆசாரி 10.03.1995ல் 1ம் பிரதிவாதி தாவா சொத்தினை காலி செய்து ஒப்படைக்கக் கோரி 1ம் பிரதிவாதிக்கு வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பியிருந்தார் என்றால் சரிதான். 1995 ஆம் ஆண்டு 1ம் பிரதிவாதி தான் தாவா வீட்டில்

குடியிருந்து வந்தார் என்றால் சரிதான். பொன்னுச்சாமி ஆசாரி அளித்த வழக்கறிஞர் அறிவிப்பிற்கு 1ம் பிரதிவாதி 23.03.1995ல் பதில் அறிவிப்பு அனுப்பினார் என்றால் சரிதான். 1ம் பிரதிவாதி பதில் அறிவிப்பில் தாவா சொத்தினை பொன்னுச்சாமி ஆசாரி 1ம் பிரதிவாதிக்கு வாய்மொழியாக நன்கொடை கொடுத்துவிட்டதாகவும், எனவே தாவா வீட்டினை காலி செய்ய இயலாது என்று குறிப்பிட்டிருந்தார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. பொன்னுச்சாமி ஆசாரி அளித்த வழக்கறிஞர் அறிவிப்பின்படி தாவா சொத்திலிருந்து 1ம் பிரதிவாதியை காலி செய்ய நீதிமன்றம் மூலம் நடவடிக்கை எதுவும் எடுக்கவில்லை என்றால் சரிதான். பொன்னுச்சாமி ஆசாரி இறக்கும்வரை தாவா சொத்தினை என் பெயருக்கு பாத்தியப்படுத்தி கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. 10 ஆண்டுகளுக்கு முன்னர் என் பெயரில் பத்திரம் எழுதிக் கொடுத்துள்ளார். வா.சா.ஆ.2னை பொன்னுச்சாமி ஆசாரி எனக்கு மனம்முகந்து எழுதிக் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ.2 பொன்னுச்சாமி ஆசாரியை கட்டாயப்படுத்தி மோசடியாக ஏற்படுத்தப்பட்டது என்றால் சரியல்ல. வா.சா.ஆ.2 ஆவணத்தில் சாட்சிகள் யாரென்று எனக்கு தெரியாது. வா.சா.ஆ.2ன் அடிப்படையில் தாவா சொத்தினை நாங்கள் அடைந்து அனுபவம் செய்யவில்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ.2 ஏற்பட்டபொழுது பொன்னுச்சாமி ஆசாரிக்கு யாதொரு பாத்தியதையும் இல்லை என்பதால் உரிமையின்றி ஏற்படுத்தப்பட்ட வா.சா.ஆ.2 சட்டப்படி செல்லக் கூடியது அல்ல என்றால் சரியல்ல. வா.சா.ஆ.2ற்கு பின்னர் 1ம் பிரதிவாதியை தாவா சொத்திலிருந்து காலி செய்யக் கோரி 09.09.2008ல் வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பியிருந்தேன் என்றால் சரிதான். 2008 ஆம் ஆண்டில் 1ம் பிரதிவாதி தாவா சொத்தில் குடியிருந்ததால் தான் காலி செய்ய அறிவிப்பு அனுப்பினேன் என்றால் சரிதான். 1ம் பிரதிவாதி தாவா சொத்தில் குடியிருந்ததற்கு பொன்னுச்சாமி ஆசாரிக்கோ, எனக்கோ வாடகை கொடுக்கவில்லை என்றால் சரிதான். 1ம் பிரதிவாதி தாவா சொத்தில் குடியிருப்பதற்கு தொகைக்கு ஈடாக குடியிருக்கவில்லை என்றால் சரிதான். 1ம் பிரதிவாதி குடியிருந்த பொழுது தாவா சொத்திற்கான மின் கட்டணம் மற்றும் தீர்வைகளை 1ம் பிரதிவாதி தான் கட்டி வந்தார் என்றால் சரியல்ல, நாங்கள் தான் கட்டி வந்தோம். தாவா சொத்திற்கு நாங்கள் செலுத்திய மின் கட்டணம் மற்றும் தீர்வை ரசீது எங்கள் வசம் இல்லை. மு.வ.எண்.261/2010 வழக்கிலும் தீர்வை ரசீது மற்றும் மின்கட்டண ரசீதுகளை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

மு.வ.எண்.261/2010 வழக்கில் 1ம் பிரதிவாதி தீர்வை ரசீது மற்றும் மின் கட்டண ரசீதுகளை தாக்கல் செய்திருந்தார் என்றால் சரிதான். ஆனால் அது போலி ரசீது ஆகும். 09.09.2008 ஆம் தேதிய வழக்கறிஞர் அறிவிப்பினை தாவா சொத்திலிருந்து காலி செய்யக் கோரி தான் 1ம் பிரதிவாதிக்கு அனுப்பினேன் என்றால் சரிதான். 09.09.2008 தேதிய வழக்கறிஞர் அறிவிப்பிற்கு 1ம் பிரதிவாதி 18.09.2008ல் பதில் அறிவிப்பு அனுப்பியிருந்தார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. அவ்வாறு 1ம் பிரதிவாதி பதில் அறிவிப்பு அனுப்பியிருந்தார் என்றாலும், அந்த விபரம் எனக்கு தெரியும் என்றாலும், தற்போது வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.